**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW-7 | Taluk | : | |
| Name | : | **அறிவானந்தம்** | Occupation | : | |
| Father Name | : | | Age | : | 38 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 06.06.2025**

**Accused A1,A2 present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் பாபநாசம் தாலுக்கா, பட்டுகுடி கிராமத்தில் வசித்து வருகிறேன், விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். இறந்துபோன பிச்சை செங்கல் சூளைக்கு ரோடு போட்டது சம்மந்தமாக எதிரிகளுக்கும் பிச்சைக்கு முன்விரோதம் இருந்து வந்தது. 20.04.2022 அன்று பிச்சையை ரமேஷ் என்பவர் அரிவாளால் வெட்டிவிட்டதாக நான் கேள்விபட்டு அய்யம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். மாலை 6.30 மணிக்கு சென்றிருந்தேன். பிச்சையின் உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது, இரவு 1.30 மணியளவில் கபிஸ்தலம் காவல்நிலைத்திலிருந்து ஆய்வாளர் வந்தார். அப்போது அவர் பிரேத விசாரணை நடத்தினார், அங்கு கிராமத்தில் நாட்டாமை மற்றும் முக்கியஸ்தர்கள் இருந்தார்கள். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இறந்து போன பிச்சை என்பவருக்கு பங்காளி முறை வேணும் என்றால் சரிதான். நான் ரமேஷ் குடும்பத்திற்கும், பிச்சை குடும்பத்திற்கும் இருந்த முன்விரோதம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன பிச்சை என்பவர் எனக்கு பங்காளி முறை என்பதால் போலிஸார் கேட்டு கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரமேஷ் பிச்சையை வெட்டியதை கேள்விபட்டதாக சொல்வது உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.